
பக்கங்கள் 16 + 05

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## சுமந்திரனின் தாயார் இன்று காலமானார்!



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திர 04

முழக்கம்: 01 | வள்ளுவ ஆண்டு 2054 | மாசி 15 | செவ்வாய்க்கிழமை | 27.02.2024 | அதிர்வு 211

# எமது கடற்றொழிலாளர்களுக்காக பதவியைத் துறந்து போராடத் தயார்

## அமைச்சர் டக்ளஸ் அதிரடி அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

**“இந்திய மீனவர்கள் பிரச்சினையில் இலங்கை மீது இந்தியா அழுத்தங்களைத் தொடர்ந்து பிரயோகித்தால் எனது அமைச்சுப் பதவியை இராஜிநாமாசெய்துவிட்டுஎமதுகடற்றொழிலாளர்களோடு சேர்ந்து இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடத் தயாராகவுள்ளேன்.”**



– இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்வின் பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அண்மையில் இந்தியத் தூதுவரைச் சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தேன். அதிகாரப் பரவலாக்கம் மற்றும் அதிகாரப் பகிர்வு சம்பந்தமான ஒரு கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.

நீண்டகாலமாக நான் முன்வைத்து வந்த 13ஆவது திருத்தத்தை வரலாறும், யதார்த்தமும் ஏற்றுக்கொண்டுள்ளது என்பதையும் வலியுறுத்தி இருந்தேன். அன்று நான் சொன்னதை சக இயக்கங்களும், தமிழ்க் கட்சிகளும் ஏற்றுக் கொண்டிருந்தால் இன்று இவ்வாறான அழிவுகள் தமிழ் மக்களுக்கு 04



# எம்.பி. பதவியை துறந்தார் உத்திக

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

இது தொடர்பான பதவி விலகல் கடிதத்தைச் சபாநாயகருக்கும், நாடாளுமன்ற செயலாளருக்கும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

உத்திக பிரேமரத்ன 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அநுராதபுரம் மாவட்டத்தில் போட்டி யிட்டு வெற்றி பெற்றார்.

விமல் வீரவன்ச தலைமையில் நாடாளுமன்றத்தில் சுயேட்சையாகச் செயற்படும் குழுவில் தற்போது உத்திக 04

## சாமிமலையில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு



(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை, ஸ்ரஸ்பி தோட்ட குமரி பிரிவில் நேற்றிரவு ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், பொலிஸ் குழுவொன்று சம்பவ இடத்துக்குச் சென்று, விசாரணைகளை மேற்கொண்டது.

40 வயது மதிக்கத்தக்க இரு பிள்ளைகளின் தந்தையான குமாரவேல் சுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



## யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில்

# கடமைகளை நேற்று பொறுப்பேற்ற புதிய துணைத் தூதுவர் சாய் முரளி

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவராக சாய் முரளி கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

அவர் தனது கடமைகளை நேற்று யாழ்ப்பாணம் - மருதடி பகுதியில் அமைந்துள்ள யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில் பொறுப்பேற்றுள்ளார்.

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில் கடமையாற்றிய துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் டில்லிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற நிலையில் புதிய துணைத் தூதுவராக சாய் முரளி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 2019ஆம் ஆண்டு இந்திய வெளிவிவகார அமைச்சில் இணைந்து ரஷ்யாவின் மாநிலமொன்றில் இந்தியத் தூதரகத்தின் கொன்ஸிலர் ஜெனரலாகப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.




# பாதசாரிகள் கடவையில் விபத்து! வயோதிபப் பெண் ஒருவர் காயம்!!

(ராமு தனராஜ்)

பசறை நகரில் பாதசாரிகள் கடவையில் வீதியைக் கடக்க முற்பட்ட வயோதிபப் பெண்ணொருவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் படுகாயமடைந்துள்ளார்.

அவர் பசறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பதுளை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார் என்று பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த வயோதிபப் பெண் பசறை ஆக்கரத்தன்னை பகுதியைச் சேர்ந்த 82 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

லுணுகலை பிரதேசத்தில் இருந்து பதுளை நோக்கிப் பயணித்த 22 வயதுடைய யுவதி செலுத்திய ஸ்கூட்டர் ரக மோட்டார் சைக்கிளே இவ்வாறு மோதியுள்ளது.

இது தொடர்பில் பசறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# கட்சி கிளைகள் புனரமைப்புகளை ஏப்ரலுக்குள் நிறைவு செய்யவும்!

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் பணிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புனரமைக்கும் வேலைத் திட்டத்தை எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் நிறைவு செய்யுமாறு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பணித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புனரமைப்பு வேலைத் திட்டம் தொடர்பான விஷேட கூட்டம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நேற்று முன்தினம் (25) கண்டியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ. காதர், பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள 226 கிராம சேவகர் பிரிவுகளில் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளும் கட்சி கிளை, இளைஞர் கிளை, மகளிர் கிளை புனரமைக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை தொகுதியில் 216 கட்சிக் கிளைகளும், பொத்துவில் தொகுதியில் 321 கட்சிக் கிளைகளும், கல்முனை தொகுதியில் 141 கட்சிக் கிளைகளும் என மொத்தமாக 678 கிளைகள் புனரமைக்கப்படவுள்ளன.

இதில் சம்மாந்துறை தொகுதியில் 37 கட்சிக் கிளைகளும், பொத்துவில் தொகுதியில் 52 கட்சிக் கிளைகளும், கல்முனை தொகுதியில் 35 கட்சிக் கிளைகளும் என மொத்தமாக 124 கிளைகள் மாத்திரம் இதுவரை புனரமைக்கப்பட்டுள்ளன.

மிகுதியாகப் புனரமைக்கப்படவுள்ள 554 கிளைகள் புனரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பிரதி தேசிய அமைப்பாளர் எம்.எஸ் உதுமாலெப்பை தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் இதுவரை கட்சிக் கிளைகள் புனரமைப்பு வேலைத் திட்டம் நிறைவுபெற்ற கிராமங்களில் விரைவில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமால் மத்திய குழுக்கள் அமைப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கு விழிப்புணர்வுச் செயலமர்வு







(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலையில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியக்கலாநிதி இரா.முரளீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மகப்பேற்று வைத்திய நிபுணர் பி.ஏ.டீ.எல்.ரன்சிறியின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அதிதியாக கல்முனை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வைத்திய அதிகாரி என்.ரமேஸ் கலந்து கொண்டார்.

மகப்பேற்று வைத்திய நிபுணர் பி.ஏ.டீ.எல்.ரன்சிறி விளக்கவுரை நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் மருத்துவ அதிகாரிகள், தாதிய பரிபாலகர், தாதிய உத்தியோகத்தர்கள், குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார்கள் கலந்து கொண்டனர்.



# வெள்ளவத்தையில் துப்பாக்கிச்சூடுகள்

## ஹோட்டல் ஒன்றை நோக்கி

கொழும்பு, வெள்ளவத்தை பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு முன்பாக இன்று அதிகாலை 5.20 மணியளவில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

வெள்ளவத்தை, இராமகிருஷ்ணா வீதி பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு முன்பாக இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் அந்தக் ஹோட்டலை நோக்கித் துப்பாக்கிச்சூடு நடத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும், எவரையேனும் பயமுறுத்தும் நோக்கில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

துப்பாக்கிச்சூடு இடம்பெற்ற இடத்தில் ரி - 56 வகை துப்பாக்கி ரவைகள் 9 மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற வேளையில் அந்தக் ஹோட்டலில் எவரும் தங்கியிருக்காத நிலையில், ஹோட்டலின் சுவர் மற்றும் இரும்புத் தூண் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### எம்.பி. பதவியை...

பிரேம ரத்ன செயற்பட்டு வருகின்றார்.

பிரபல நடிகருமான இவரை இலக்கு வைத்து கடந்த செப் டெம்பர் மாதம் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருந்தமையும் குறிப் பிடத்தக்கது.

### சாமிமலையில்...

இவர் காணாமல்போயுள்ளார் என அவரின் மனைவியால் ஐந்து நாட்களுக்கு முன்னர் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் மஸ்கெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### எமது கடற்றொழி...

ஏற்பட்டிருக்காது என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தேன்.

வருங்கால நாட்டினுடைய அரசு எப்படி இருக்கும், எவர் தலைமையிலான அரசு அமையப்பெறும் என்பது சம்பந்தமாக கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க புதுடில்லி சென்று பல்வேறு தரப்புக்களையும் சந்தித்திருந்தார். ஆனால், எங்களுடைய கடற்றொழிலாளர்களுடைய பிரச்சினை பற்றி ஒரு கருத்தும் அவர் கூறவில்லை.

அதுபோல் சமீபத்தில் வடக்கு மாகாண தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இந்தியத் தூதுவர் சந்தித்திருந்தார். அங்குகூட எங்களுடைய கடற்றொழில் மக்களின் பிரச்சினைகள் பற்றிகி கலந்துரையாடப்படவில்லை. எனினும், நான் கூடுதலான நேரம் இந்திய மீனவர்களின் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளால் எங்களுடைய வளங்களும் மீனவர்களுடைய வாழ்வாதாரமும் அழிக்கப்படுகின்றது என்பதையும் சுட்டிக் காட்டினேன்.

இலங்கைக் கடற்பரப்பில் ஒரு வினாடி கூட தடை செய்யப்பட்ட சட்டவிரோத தொழிலுக்கு இடம் இல்லை என்பதையும் வலியுறுத்தியுருந்தேன். மேலும், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடலில் தொழில் செய்வதற்கான அழுத்தங்களை இந்தியா, இலங்கை அரசுக்குத் தொடர்ந்து பிரயோகித்தால் நான் அமைச்சரவையில் இருந்து இராஜிநாமா செய்து எமது கடற்றொழிலாளர்களோடு சேர்ந்து கடலில் இந்திய ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்குத் தயாராக இருப்பேன் என்பதையும் சொல்லி இருந்தேன்.

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டு கைதான இந்திய மீனவர்களை விடுவிக்கக்கோரி இந்தியாவில் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்கள். அது அவர்களுடைய கோரிக்கை. ஆனால், இதனை சட்டரீதியாக நாங்கள் பார்க்க வேண்டும்.

எதிர்வரும் 3 ஆம் திகதி வடக்கு மீனவர்களால் நடுக்கடலில் கறுப்புக் கொடி போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. நான் அமைச்சராக உள்ளதால் அந்தப் போராட்டத்தில் நேரடியாகக் கலந்து கொள்ளமாட்டேன். ஒரு வேளை அதற்குள் எனது பதவியை இராஜிநாமா செய்தால் அந்தப் போராட்டத்தில் நிச்சயம் கலந்து கொள்வேன்." - என்றார்.

### சுமந்திரனின்...

னின் தாயார் புஷ்பராணி மதியாபரணன் (வயது 85) இன்று மதியம் 1:30 மணியளவில் கொழும்பு - தெகிவளையில் தனது மகளின் இல்லத்தில் காலமானார்.

முதுகுத் தண்டு சத்திர சிகிச்சையின் பின்னர் கடந்த இரண்டு வருட காலமாகப் படுக்கையில் இருந்த அவர், இன்று பிற்பகல் உலகை விட்டுப் பிரிந்தார்.

அவரது இறுதிச் சடங்கு பெரும்பாலும் நாளைமறுதினம் வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமது கணவர், ஒரே மகள் மற்றும் ஒரே மகனையும் அவர்களது குடும்பத்தவர்களையும் விட்டு அவர் பிரிந்துள்ளார்.




# ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் விமான தொழில்நுட்ப வல்லுநர் வெளியேற்றம்

கடந்த இரண்டு வருடங்களில் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸின் விமான தொழில்நுட்ப வல்லுநர்கள் 160 பேர் தங்கள் வேலையை விட்டு வெளியேறியுள்ளனர்.

தற்போது 250 விமான தொழில்நுட்ப வல்லுநர்கள் மட்டுமே அங்கு பணிபுரிவதாக அதன் விமான தொழில்நுட்ப வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸின் கூற்றுப்படி, 415 விமான தொழில்நுட்ப வல்லுநர்கள் சேவையில் உள்ளனர் என்று குறிப்பிடுகின்றனர்.

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தில் 70 ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்துடன் விமான தொழில்நுட்ப வல்லுநர் பணிபுரிய முடியும் எனவும், அதிகபட்ச சம்பளம் ஒரு லட்சம் முதல் இரண்டு லட்சம் ரூபாவரை பெறமுடியும் எனவும் தெரிவிக்கின்றனர்.

மேலும், சில வெளிநாட்டு விமான நிறுவனங்கள் விமான தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு 10 லட்சம் ரூபா உயர் சம்பளம் கோருகின்றனர் எனவும் தொழில்நுட்ப வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர்.

# தோட்ட உரிமையாளரால் தாக்கப்பட்டுள்ள சிறுவன்

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் தோட்டத்தின் உரிமையாளரால் 14 வயது சிறுவன் ஒருவன் தாக் கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நேற்று முன்தினம் (25) இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி திருவையாறு மூன்றாம் பகுதியில் உள்ள தனியார் ஒருவரின் தோட்டத்துக்குள் அயல் வீட்டு ஆடு சென்று பயிர்களுக்குச் சேதம் ஏற்படுத்தியுள்ளது. இதனால், தோட்ட உரிமையாளர் ஆட்டு உரிமையாளர் வீட்டுக்குச் சென்று அங்கிருந்த 14 வயது சிறுவனை அழைத்துச் சென்று தனது தோட்டத்துக்குள் வைத்துக் கடுமையாக தாக்கியுள்ளார்.

இவ்வாறு தாக்கப்பட்டதில் பாதிக்கப்பட்ட சிறுவன் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

# எதிர்வரும் நாடாளுமன்றம் பெண் உறுப்பினரால் நிறையும்

## விஜித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு



எதிர்வரும் நாடாளுமன்றை பெண் உறுப்பினர்களை கொண்டு நிரப்புவோம்.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட மகளிர் கூட்டத்தில் பங்கேற்ற போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கூறுகையில்,

எமது கட்சியின் வேட்பாளர்களாக பெண்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

ஆண்கள் மட்டுமன்றிப் பெண்களுக்கும் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

தேசிய மக்கள் சக்திக்கு அச்சம் கொண்டுள்ள அரசு மேடைகளில் ஆரம்பம் முதல் இறுதி வரையில் கட்சியைக் குறைகூறி விமர்சனம் செய்கிறது.-என்றார்.

## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சட்டமா அதிபரின் பொறுப்பு

சட்டமா அதிபர் திணைக்களம் அரசாங்கத்துக்குச் சட்ட ஆலோசனை வழங்கும் கட்டமைப்புத்தான். ஆனால் அத்தோடு அத்திணைக்களத்தின் பொறுப்பும் கடப்பாடும் அடங்கி விடாது. அதைவிடப் பரந்தது அதன் பொறுப்பு.

இலங்கை நாட்டுக்காகவும், அங்கு வாழும் மக்களுக்காகவும், நீதியையும், நியாயத்தையும் நிறைவேற்றுவதற்காகப் பயனுள்ளவாறு பதிலளிக்கும் செயற்பாட்டின் முன்னோடி அரச நிறுவனமாக அது செயற்பட வேண்டும் என்று வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

இலங்கை மக்களுக்கு நீதி, பாதுகாப்பு மற்றும் சுயாதீனத்தை உறுதிப்படுத்துவதற்காகப் பாரபட்சமின்றியும் நீதி, நீதியாகவும், இலங்கையின் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் முயற்சிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது.

ஆனால், இத்தகைய பொறுப்புடன் இலங்கையின் சட்டமா அதிபர் திணைக்களம் செயற்படுகின்றதா என்ற கேள்வி இப்போது எல்லோர் மனதிலும் எழுந்துள்ளமை நிஜமே.

அரசாங்கத்துடன் இணைந்து, நீதி, நியாயம்,சட்டத்தை நிலை நிறுத்தும் பொறுப்புள்ள அமைப்பாக செயல்படும் அதன் கடப்பாட்டை விடுத்து, அரசாங்கத்தின் ஊதுகுழலாக - அரசாங்கம் இழைக்கும் சட்டத் தவறுகளை நியாயப்படுத்தும் அரசாங்கத்தின் கட்டமைப்பாக - முகவர் அமைப்பாக - சட்டமா அதிபர் திணைக்களம் செயற்படுகின்றதோ என்று மக்கள் எரிச்சலுடன் நோக்கும் வகையில் அதன் போக்குகள் அமைந்திருக்கின்றன என்பதுதான் நிலைமை.

இடித்துரைக்கும் அமைச்சர்கள் இல்லாத மன்னன் கெடுப்பார் இல்லாமல் கெட்டு விடுவான் என்பது குறட்பாவின் அர்த்தம்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை சட்டம், நீதி முறைமை போன்ற விடயங்களில் இடித்துரைக்கும் - எடுத்துரைக்கும் - மந்திரி போல செயல்பட வேண்டிய பிரதான பொறுப்பு சட்டமா அதிபர் திணைக்களத்திற்குரியது.

ஆனால் இப்போதெல்லாம் அந்தப் பணியை சட்டமா அதிபர் திணைக்களம் சரிவர ஆற்றுவதில்லை, அரசின் சட்ட, நீதி முறைமைத் தவறுகளுக்கு தலையாட்டி இணங்குவது மட்டுமல்லாமல், அத்தகைய முறையற்ற செயற்பாடுகளை வலிந்து நியாயப்படுத்தும் விதத்தில் பணியாற்றுவதன் மூலம் அரசு இழைக்கும் அத்தகைய பெரும் தவறுகளை சட்டமா அதிபர் திணைக்களமும் சேர்ந்து அதில் பங்காற்றித் தீங்கிழைக்கின்றது என்ற கருத்து நிலைப்பாடு மக்கள் மனதில் எழுந்துள்ளது.

அதாவது அரசின் நீதி, சட்ட முறைமை தவறுகளில் தாமும் ஒரு பங்காளியாகி, தமது திணைக்களத்தின் தனித்துவத்தையும், பொறுப்பையும், கடப்பாட்டையும், வரலாற்று முக்கியத்துவத்தையும் இப்போது அத்திணைகளத்தை வழிநடத்துவோர் கெடுத்து, சிறுமைப்படுத்துகிறார்கள் என்ற அவதானிப்பே இப்போது வெளிப்படுகின்றது.

நிகழ்நிலைக்காப்புச் சட்டத்தின் விடயத்தில் சபாநாயகர் நடந்து கொண்ட விதம், அரசமைப்புக் கவுன்ஸில் தீர்மான விவகாரத்தில் சபாநாயகரின் செயற்பாடு பற்றிய சட்டவியாக்கியானம் போன்ற அம்சங்களில் சட்டமா அதிபரும் அவரது திணைக்கள சட்ட நிபுணர்களும் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள் என்ற கேள்வி பார்வையாளர்கள் மனதில் எழுந்திருப்பது மறைக்கக் கூடியதல்ல.

அதுவும் நிகழ்நிலைக்காப்புச் சட்டம் தொடர்பான உயர்நீதிமன்ற விசாரணைகளில் அரசுத் தரப்பின் சார்பில் முன்னிலையாகி, வாதிட்டது வழமை போல சட்டமா அதிபர் திணைக்களம்தான்.

அது தொடர்பில் - அந்தச் சட்டத்தின் நிறைவேற்றம் தொடர்பில் - உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்கள் சரியாக - முழு அளவில் - பின் பற்றப்பட்டு, சட்டம் நிறைவேற்றப்படுகின்றதா என்பது தொடர்பில் நாடாளுமன்றக் குழுநிலை விவாதத்திலும் பின்னரும் அரசாங்கத்திற்கு வழிகாட்ட வேண்டியவர் சட்டமா அதிபர் அல்லது அவரது பிரதிநிதிதான்.

நிகழ்நிலைக் காப்புச் சட்டத்திற்குச் சான்றளித்தமை தொடர்பில் சபாநாயகர் தவறேதும் செய்திருப்பாராயின், அத்தவறுக்குச் சட்டமா அதிபரும் கூட்டுப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பதும் மறுக்கக் கூடியது அல்ல.

சட்டமா அதிபரும் அவரது திணைக்களமும் நீதி, சட்டம் - ஒழுங்கு முறைமை நிலை நாட்டப்படுவதில் தாம் எப்படி நியாயமாகக் காரியமாற்றுகின்றார்கள் என்பதைப் பகிரங்கமாகத் தோன்றி விளக்கமளிக்க வேண்டும் என்பதல்ல. அப்படி எதிர்பார்க்கவும் முடியாது.

ஆனால் ‘நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரம் அன்று; நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்’ - என்ற சட்ட வாக்கியத்தை மட்டும் சட்டமா அதிபருக்கும் அவர் திணைக்களத்துக்கும் நினைவூட்ட விரும்புகிறோம்.



# அட்டாளைச் சேனையில் தானசாலை நிகழ்வு

(எம். எப். நவாஸ்)

அட்டாளைச் சேனை பிரதேச சக வாழ்வு சங்கத்தால் நடத்தப்பட்ட கடலை தானம் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் பீ.ரீ.எம்.இர்பான் வழி காட்டலின் கீழ் தீகவாவி ரஜ மஹா விகாரையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நீதி அமைச்சர் டாக்டர் விஜயதாஷ ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் அனுராதா ஜெயரத்தின, அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வி.ஜெகதீசன் அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எப்.நஹீஜா முஸாபீர், தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.றிஸான், கலாச்சார உத்தியோகத்தர் ஜஃபர் மற்றும் அம்பாறை மாவட்ட உள வளத்துணை ஆலோசகர் மனூஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# போலி காசோலை வழங்கிய சீன பெண்ணொருவர் கைது!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

வியாபார நோக்கத்துக்காக இலங்கை வந்திருந்த சீன வியாபார நிறுவனம் ஒன்றை சேர்ந்தவர்களுக்கு 84 லட்சம் ரூபாவுக்குப் போலி காசோலையை வழங்கிய இலங்கையில் வியாபார நிறுவனம் ஒன்றை நடத்திச் செல்லும் சீன நாட்டைச் சேர்ந்த பெண் ணொருவரை சந்தேகத்தின் பேரில் கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பெண் ஏற்கனவே கொள்ளுப் பிட்டியிலுள்ள தனியார் நிறுவனமொன் றுக்கு 84 லட்சத்து 40 ஆயிரம் ரூபா வுக்குப் போலி காசோலை வழங்கி ஜன வரி 31 ஆம் திகதி கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபரான பெண் கொழும்பு கோட்டை நீதிமன்றத் தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# தம்புள்ள பொருளாதார மத்திய நிலையம் விற்கப்படவுள்ளது என்னும் தகவல் பொய்!

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

இலங்கையின் பிரதான வர்த்தக நிலையமான தம்புள்ள பொருளாதார மத்திய நிலையம், வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு விற்பனை செய்யப்பட உள்ளது என்றும் வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தம்புள்ள வர்த்தக சங்க உறுப்பினர்களை சந்தித்து உரையாடிய போது அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையம் தொடர்பில் சமூக ஊடகங்களில் வெளியாகும் தகவல்களில் எவ்வித உண்மையும் கிடையாது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் தொலைபேசி ஊடாக விவசாய அமைச்சரைத் தொடர்பு கொண்டு இந்த சர்ச்சை குறித்து கேட்டறிந்து வர்த்தகர்களை அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார். இவ்வாறான போலிப் பிரச்சாரங்களைக் கேட்டு மக்கள் ஏமாறக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# புத்தூர் பகுதியில் வீடு ஒன்று மின் கசிவால் எரிந்து நாசம்!

யாழ்ப்பாணம் – புத்தூரில் உள்ள வீடொன்று நேற்று (26) இரவு தீப்பிடித்து எரிந்து சேதமானது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தூர் கலைமதிப் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று இரவு 8.30 மணியளவில் தீப்பரவியது.

இதனையடுத்து தீயணைப்பு படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து தீப்பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்தத் தீ விபத்தால் உயிர் சேதம் எதுவும் ஏற்படாத நிலையில் மின்கசிவு காரணமாகவே வீடு தீப்பிடித்து எரிந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 2024 ஜனவரியில் மட்டும் 83 கொலைச் சம்பவங்கள்!

இலங்கையில் இந்த ஆண்டின் (2024) முதல் ஒரு மாத காலப் பகுதியில் 83 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் DIG சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்துள்ளார்.

நேற்று (26) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போது அவர் இதனைக் குறிப்பட்டுள்ளார்.

இதேவேளை, வீடுகளை உடைத்தல் மற்றும் சொத்துக்களை திருடுதல் போன்ற 1,180 வழக்குகள் பதிவாகியுள்ளன. 310 கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.




குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸார் தற்போது பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஜனவரி முதலாம் திகதி முதல் இது வரை 20 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. சுமார் 10 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி கள் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.



# நாடாளுமன்ற செயற்பாடுகள் தொடர்பான குறுங்கால கற்கை மாணவருக்குச் சான்றிதழ்

(கே. எ. ஹமீட்)

தென் கிழக்கு பல்கலைக்கழக, கலை கலாச்சார பீட அரசியல் விஞ்ஞான துறை, நாடாளுமன்றத்துடன் இணைந்து, பல்கலைக் கழக உள்வாரி இளங்கலைப்பட்டதாரி மாணவர்களுக்கு 'நாடாளுமன்ற செயற்பாடுகளும் ஒழுங்கு முறைகளும்' பற்றிய குறுங் கால கற்கை நெறியை நடத்தியது.

இதில் கலந்துகொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு இன்று (27) கலை கலாச்சார பீட அரசியல்துறை தலைவர் கலாநிதி எம்.அப்துல் ஜப்பார் தலைமையில் தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வரவேற்புரையை கலாநிதி எம். அப்துல் ஜப்பாரும் அறிமுக உரையை நாடாளுமன்றத் தொடர்பாடல் பிரிவின் மக்கள் தொடர்பு அதிகாரி யாஸ்ரி முகம் மட்டும் ஆற்றினர்.

நாடாளுமன்றத் தொடர்பாடல் பிரிவுடன் இணைந்து நடத்தப்பட்ட இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி அனுஷா ரோஹனதீர கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கற்கை நெறியைப் பூர்த்திசெய்த 246 மாணவர்கள் இந்த நிகழ்வின் போது தாங்களுக்கான சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி அனுஷா ரோஹனதீரவுக்கு உபவேந்தரால் நினைவு சின்னம் வழங்கப்பட்டது.

# ஐக்கிய மக்கள் சக்தி மகளிர் மாநாட்டை நாடளாவிய ரீதியில் நடத்தத் தீர்மானம்

ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் மாநாடுகளை நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்க அந்த கட்சி திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது மகளிர் மாநாடு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர ஏற்பாட்டில் அண்மையில் கண்டியில் நடைபெற்றது. அதில் கணிசமான பெண்கள் கலந்து கொண்டிருந்தனர். இந்த நிலையில் அவ்வாறான மாநாடுகளை நாடு தழுவிய ரீதியில் நடத்த அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் பெண்களின் வாக்குகளே திருப்புமுனையாக அமையும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.




# 20 சமாதான நீதிவான்களுக்கு நியமனங்கள் வழங்கி வைப்பு!

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தன் அழைப்பின் பேரில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வருகை தந்திருந்த நீதி அமைச்சர் விஜயதாஷ ராஜபக்ஷ, 20 புதிய சமாதான நீதிவான்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கினார்.

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் பிராந்திய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் நீதி இராஜாங்க அமைச்சர் அநுராதா ஜெயரத்தின, நீதியமைச்சின் செயலாளர் எம்.என்.ரணசிங்க, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.




# அட்டாளைச்சேனை ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகத்தினர் - பிரதேச செயலர் சந்திப்பு

**(எம். எப். நவாஸ்)**

அட்டாளச்சேனை ஜும்மா பள்ளிவாசல் தலைவர் ஏ. எல்.அனீஸ் தலைமையிலான பள்ளி நிர்வாகக் குழுவினர் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குப் புதிதாக நியமனம் செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பி. ரீ. எம். இர்பானைச் சந்தித்துக் கலந்துரையாடினர்

பொது மக்களுக்கும் செயலகத்துக்கும் இடையிலான நல்லிணக்கம் தொடர்பில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.



# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் சர்வதேச ஆய்வரங்க நிகழ்வுகள்!

## நுழைவுச் சீட்டுக்கள் நேற்று அறிமுகம்

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 12 ஆவது சர்வதேச ஆய்வரங்க நிகழ்வுகள் நாளை மறுதினம் 29 ஆம் திகதி இடம்பெறவுள்ளன.

இதற்கான நுழைவுச் சீட்டுக்களை அறிமுகம் செய்யும் நிகழ்வும் தனியார் துறை நிறுவனங்களின் தலைவர்களுக்கு வழங்கிவைக்கும் நிகழ்வும் ஆய்வரங்க இணைப்பாளர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா தலைமையில் நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

உள்ளூர் தனியார்துறை நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பல்கலைக்கழக பீடாதிபதிகள், நூலகர், பேராசிரியர்கள் திணைக்களங்களின் தலைவர்கள் விரிவுரையாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

29 ஆம் திகதி "Digital Transformation for a Sustainable Future" எனும் தொனிப்பொருளில் இடம்பெறவுள்ள ஆய்வரங்கில் பிரித்தானியாவின் குளோசெஸ்டர்ஷைர் பல்கலைக்கழகத்தின் கணினி மற்றும் பொறியியல் பீடத் தலைவர் பேராசிரியர் கமால் விச்கோம் பிரதான பேச்சாளராக கலந்து கொள்ளவுள்ளார்.

மாநாட்டில் 200 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# தேசிய கட்டுமான சங்கத்தின் விருதுகள் வழங்கும் நிகழ்வு

(ஆதம்)

இலங்கை தேசிய கட்டுமான சங்கத்தின் 27 ஆவது வருட விருது வழங்கும் நிகழ்வு நேற்று (26) அக்கரைப்பற்று ஐனா பீச் விடுதியில் இடம்பெற்றது.



இலங்கை தேசிய கட்டுமான சங்கத்தின் தலைவர் டீ.போல் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கட்டட மற்றும் நிர்மாணத் துறையில் சிறந்த முறையில் பணிகளை முன்னெடுத்த 8 நிறுவனங்கள் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரம கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார்.

அந்த வகையில் கடந்த காலங்களில் சிறந்த முறையிலும் நேர்த்தியாகவும் கட்டுமான பணிகளை முன்னெடுத்த பொத்துவில் ஹிமா ஆலோசகர்கள் மற்றும் கட்டுமானம் நிறுவனத்துக்கு சிறப்பு விருது மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டன. நிறுவனத்தின் பணிப்பாளரும், தொழிலதிபருமான ஐ.எல்.ஹில்முடீன் இவற்றைப் பெற்றுக் கொண்டார்.




# காரைதீவுப் பிரதேச சபையில் முன்னாள் தவிசாளருக்கு வரவேற்பு

(வி.ரி. சகாதேவராஜா)

உலகத்தமிழ் பல்கலைக்கழகத்தால் அண்மையில் சமூக சேவைக்கான கலாநிதி பட்டம் வழங்கப்பட்ட முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலுக்கு நேற்று (26) பிரதேச சபையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

சபையின் செயலாளர் அருணாசலம் சுந்தரகுமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

சபையில் கலாநிதிப் பட்டம் பெற்ற ஜெயசிறில் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.






# சமூக நீதி பற்றி பேசுவதற்கு தி.மு.கவுக்கு தகுதி இல்லை

## அன்புமணி விமர்சனம்

சமூக நீதி பற்றி பேசுவதற்கு தி.மு.கவுக்கு தகுதி இல்லை என்று பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம் வடலூரில் சர்வதேச மையம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து பா.ம.க. சார்பில் விளக்கப் பொதுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு அன்புமணி ராமதாஸ் உரையாற்றுகையில்,

“157 ஆண்டுகளுக்கு முன்பு இதே பகுதி மக்கள் இந்த இடத்தை வழங்கினார்கள். ஆனால் தற்போது இதில் சர்வதேச மையம் அமைக்க தி.மு.க. அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தி.மு.க. கொள்கைக்கும் வள்ளலாருக்கும் என்னசம்பந்தம்? வள்ளலார் கொள்கைக்கு எதிராக கஞ்சா, போதைப் பொருள்கள், மது விற்பனை செய்யப்படுகிறது. இதனால் பல குடும்பங்களின் தாலி அறுக்கப்பட்டுள்ளது.

இங்கு பெரு வெளியில் சர்வதேச மையம் அமைக்க 100 சதவீதம் மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். இதனை சென்னையில் கட்டினால் உலகம் முழுக்க வள்ளலார் புகழ்ஓங்கி நிற்கும். மீண்டும் இங்கேதான் கட்டுவேன் என்று சீண்டி பார்க்காதீர்கள். தமிழகத்தில் மற்ற கட்சிகள் எல்லாம் தேர்தல் வெற்றிக்காக போராடுகின்றன. நாம்தான் மண்ணையும், மக்களையும் காக்க போராடி வருகிறோம். என்.எல்.சியில் மூன்றாவது சுரங்கம் அமைக்க யாராவது வாய் திறந்தால் நாங்க சும்மா இருக்க மாட்டோம். தற்போது தமிழகத்தில் பஞ்சு மிட்டாய் தடை செய்துள்ளீர்கள். பஞ்சு மிட்டாயை விட பல்லாயிரம் மடங்கு போதைகள் கொண்ட பொருள்களை விற்பனை செய்வதை ஏன் தடுக்கவில்லை? ஏனென்றால் அதன் மூலம் உங்களுக்கு லாபம் வருகிறது.

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதில் உங்களுக்கு என்ன பிரச்சினை? கர்நாடக உள்ளிட்டமாநிலங்களில் கணக்கெடுப்பு நடத்தியுள்ளனர். தி.மு.க. சமூக நீதி பற்றி பேச தகுதியற்றவர்கள். இந்தியாவுக்கு வெளிநாடுகளில் இருந்து எவ்வளவு பறவைகள் வருகின்றன என கணக்கெடுப்பு நடத்துகிறீர்கள். ஆனால் எத்தனை மனிதர்கள் உள்ளார்கள் என சாதி வாரி கணக்கெடுப்பு நடத்துவதற்கு ஏன் உங்களுக்கு தயக்கம்? தமிழகத்தில் இரு கட்சிகளும் தடுப்பணையை கட்டமாட்டார்கள். ஏனென்றால் மணல் கொள்ளையில் ஈடுபட முடியாது என்பதற்காக தான் .”– என்றார்.

# பிரதமர் மோடி வருகை காரணமாக கோவை, திருப்பூரில் ஏற்பாடுகள் தீவிரம்



திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே மாதப்பூரில் பிரதமர் மோடி பங்கேற்கும் பா.ஜ.க. பொதுக்கூட்டம் இன்று நடைபெறுவதால், போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலையின் ‘என் மண், என் மக்கள்’ பாத யாத்திரை நிறைவு பயணத்தை ஒட்டி, பிரதமர் மோடி பங்கேற்கும் வகையில் பொதுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுக்கூட்ட மேடை தாமரை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல், மேடையை சுற்றி பிரதமர் மோடி, அமித்ஷா, ஜே.பி. நட்டா, அண்ணாமலை ஆகியோரின் முழு உருவ கட் அவுட்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் பொதுக் கூட்டத்துக்காக, தாராபுரத்தில் இருந்து கொடுவாய் – அவிநாசி பாளையம் – சுங்கம் மார்க்கமாக திருப்பூர் செல்லக்கூடிய கனரக வாகனங்களும், திருப்பூர் மாநகரில் இருந்து தாராபுரத்துக்கு சுங்கம் நான்கு சாலை வழியாக வரும் கனரக வாகனங்களும் இன்று காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை அந்த வழியாக செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

# தமிழையும், தமிழகத்தையும் மதிக்கும் ஆட்சியினை உருவாக்க வேண்டும்

## கனிமொழி வலியுறுத்தல்



"இது வெறும் அரசியல் வெற்றியை முன்வைக்கும் தேர்தல் அல்ல. தமிழ் மொழியை, தமிழகத்தை மதிக்கும் ஆட்சியை உருவாக்க வேண்டும்."

– இவ்வாறு தேர்தல் அறிக்கைக்கான கருத்துக் கேட்பு கூட்டத்தில் தி.மு.க. எம்.பி. கனிமொழி தெரிவித்தார்.

மக்களவை தேர்தலுக்கான பணிகளில் திமுக தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

தொகுதிப் பங்கீடு, தேர்தல் வியூகம் அமைத்தலுக்கான பணிகளை அதற்கென அமைக்கப்பட்ட குழுக்கள் மேற்கொண்டு வரும் நிலையில், கனிமொழி எம்.பி. தலைமையிலான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவானது, மண்டலவாரியாக வணிகர்கள், விவசாயிகள், பொதுமக்கள், தொழில்பிரிவினர் என பல தரப்பினரின் கருத்துகளை கேட்டு வருகிறது.

அந்த வகையில், இந்தக் குழுவினர் நேற்று சென்னை அண்ணா அறிவாலயத்தில், காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களிடம் கருத்து கேட்டனர்.

இக்கூட்டத்தில் குழுவின் தலைவர் கனிமொழி எம்.பி. கருத்து தெரிவிக்கையில்,

"தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு சென்று மக்களை சந்தித்து அவர்களுடைய கோரிக்கைகள், கருத்துகளை கேட்டறிந்து, மக்களுடைய தேர்தல் அறிக்கையாக தயாரிக்க வேண்டும் என்று முதல்வர் எங்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதை ஏற்று, கன்னியாகுமரி, தூத்துக்குடி, மதுரை என பல்வேறு பகுதிகளுக்கு சென்று, விவசாயிகள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், தொழில் முனைவோர், மகளிர் சுய உதவிக் குழுக்கள், மாணவர்கள் என பல்வேறு தரப்பினரை சந்தித்தோம். அவர்களின் கருத்துகளை ஒருங்கிணைத்து, தலைவரிடம் ஒப்புதல் பெற்று, அறிக்கை தயாரிக்க உள்ளோம்.

நடைபெற உள்ள மக்களவைத் தேர்தல் மிக முக்கியமானது. வெறும் அரசியல் வெற்றியை முன்வைக்கக் கூடிய தேர்தல் அல்ல. இந்நாடு எல்லோருக்குமான நாடாக, அனைத்து மாநிலங்கள், மொழிகளை ஏற்று மதிக்கும் நாடாக இருக்க வேண்டும்.

மாநில உரிமைகளை மதிக்கும் அரசை உருவாக்கும் தேர்தலாக இது அமைய வேண்டும். மத்திய பா.ஜ.க. மாநில உரிமைகள், மனிதனின் சுயமரியாதை, கருத்துரிமை ஆகியவற்றை சீரழித்து வரும் சூழல் உள்ளது. விவசாயிகள் போராட்டம், ஜி.எஸ்.டி. என்ற குழப்பம் மிகுந்த வரியின் மூலம் வணிகர்கள், தொழில்முனைவோர் தொழில் செய்ய முடியாத நிலை என அனைத்து தரப்பு மக்களையும் வதைக்கும் சட்டங்களை பா.ஜ.க. அரசு உருவாக்கியுள்ளது.

இதனால், எதிர்வரும் தேர்தலில் மக்களை மதிக்கும் அரசு அமைய வேண்டும். தமிழ் மொழியை, தமிழகத்தை மதிக்கும் ஆட்சியை உருவாக்க வேண்டும்.இது முதல்வரின் தலைமையில், ஒருங்கிணைப்பில் நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் தேர்தல் பணியாற்ற வேண்டும்." – என்றார்.

# டில்லியில் போதைப்பொருள் பறிமுதல்: பின்னணியில் திரைப்படத் தயாரிப்பாளர்



இந்தியாவின் டில்லியில் 50 கிலோ எடையுள்ள 200 கோடி ரூபாய் பெறுமதி கொண்ட சூடோ பெட்ரைன் என்ற போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் திடுக்கிடும் பல தகவல்கள் வெளியாகியுள்ளன என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த போதைப்பொருளை கடத்தி வந்த 3 பேரிடம் அண்மையில் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், இந்த கடத்தல் குழுவின் மூளையாக தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் ஒருவரே செயற்பட்டுள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

எனவே அவரை கைது செய்வதற்கான முயற்சிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், மேற்படி திரைப்பட தயாரிப்பாளர் தலைமறைவாக உள்ள நிலையில் அவரை தேடும் பணியில் டில்லி பொலிஸ் சிறப்பு பிரிவோடு, போதைப் பொருள் தடுப்பு பிரிவும் இணைந்து ஈடுபட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, கடந்த 3 வருடங்களில் கிட்டத்தட்ட 45 முறை போதைப் பொருள்களை சர்வதேச சந்தைகளுக்கு கடத்தியிருப்பதாகவும், அவற்றின் மதிப்பு 2 ஆயிரம் கோடிக்கு மேல் இருக்கும் எனவும் கைது செய்யப்பட்ட கடத்தல்காரர்கள் வாக்கு மூலம் வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# லெபனானில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் பிராந்தியத் தளபதி பலி

லெபனானின் தெற்கு பகுதியில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் பிராந்திய தளபதி கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது.

படைப்பிரிவு ஒன்றின் தளபதிக்கு நிகரான பதவியில் இருக்கும் சலாமி, தெற்கு லெபனான் கிராமமான மஜடேலில் வாகனத்தில் செல்லும்போது குறிவைக்கப்பட்டார்.

சலாமி ஹிஸ்புல்லாவின் பிராந்திய தளபதியாக இருந்ததாகவும், வடக்கு இஸ்ரேலில் படையினர் மற்றும் இஸ்ரேலிய சமூகங்கள் மீதான தாக்குதல்களை மேற்பார்வையிட்டதாகவும் இஸ்ரேல் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

சலாமி ஹிஸ்புல்லாவின் பிராந்திய தளபதியாக இருந்தார் எனவும் வடக்கு இஸ்ரேலில் படையினர் மற்றும் இஸ்ரேலிய சமூகங்கள் மீதான தாக்குதல்களை மேற்பார்வையிட்டார் என்றும் இஸ்ரேல் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

சலாமி கொல்லப்பட்டதை ஹெஸ்புல்லா உறுதிப்படுத்திய அதேவேளை அவர் தளபதியா என்ற தரவரிசையை வெளியிடவில்லை.

# விண்வெளியில் சீன ஆதிக்கம் அதிகரிப்பு; இந்த ஆண்டில் 100 விண்வெளி ஏவுதல்கள்



விண்வெளியில் சீனா தனது செல்வாக்கை அதிகரித்து வரும் நிலையில், இந்த ஆண்டில் சுமார் 100 விண்வெளி ஏவுதல்களை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது.

சீனாவின் இந்த நடவடிக்கை, புதிய வரலாற்று பதிவை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீன விண்வெளி அறிவியல் தொழில்நுட்ப நடவடிக்கை பற்றிய கடந்த ஆண்டுக்கான நீல அறிக்கையை அந்த நாட்டு விண்வெளி அறிவியல் தொழில்நுட்ப குழுமம் நேற்று வெளியிட்டது. இந்த ஆண்டுக்கான சீனாவின் விண்வெளி ஏவுதல் நடவடிக்கைகள் தொடர்பிலும் அறிவித்துள்ளது.

இதன்படி, சீனாவின் முதலாவது வணிக விண்வெளி ஏவுத் தளத்தில் இந்த ஆண்டுக்கான முதலாவது ஏவுதல் கடமை மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன், செயற்கை கோள் விண்மீன் தொகுதியின் இணைப்பு கட்டுமானம் விரைவுப்படுத்தப்படவுள்ளது.

சீன விண்வெளி அறிவியல் தொழில்நுட்ப குழுமம் சுமார் 70 முறை விண்வெளி செலுத்தல் கடமைகளை ஏற்பாடு செய்து, 290 இற்கும் மேலான விண்கலங்களை விண்ணில் செலுத்தி, பல முக்கிய திட்டப்பணிகளை மேற்கொள்ளவுள்ளது.

இதேவேளை, கடந்த ஆண்டு சீனா 67 விண்வெளி ஏவுதல் கடமைகளைச் செயல்படுத்தியுள்ளது. உலகளவில் இந்த நடவடிக்கைகளை செயல்படுத்தும் தரவரிசையில் இரண்டாவது இடத்தை சீனா பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாலஸ்தீன பிரதமர் பதவி விலகுகிறார்



பாலஸ்தீன பிரதமர் பதவியில் இருந்து விலகுவதாக மொஹமட் சடேய் அறிவித்துள்ளார்.

பாலஸ்தீனத்தில் தமது தலைமையிலான அரசாங்கத்தை கலைத்துவிட்டு புதிய அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு அவர் இணக்கம் வெளியிட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில், தமது பதவி விலகல் கடிதத்தை, பாலஸ்தீன ஜனாதிபதி மொஹமட் அப்பாஸிடம் கையளித்துள்ளார் என குறிப்பிடப்படுகின்றது.

காசா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தொடர் தாக்குதல் காரணமாக தான் இந்த முடிவை எடுத்திருகின்றேன் எனவும் காசாவில் போர் முடிவுற்ற பின், அதற்குப் பிந்தைய சூழலில் பாலஸ்தீனத்தை நிர்வகிக்க புதிய அரசாங்கம் ஒன்று அமைவதே சிறந்ததாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# ஆண்களின் நிர்வாணத் திருவிழாவில் பெண்கள் பங்கேற்பதற்கு அனுமதி

ஜப்பானில் 1250 ஆண்டுகள் பழமையான ஆண்களின் நிர்வாண திருவிழாவில் பங்கேற்க முதன்முறையாக பெண்களும் பங்கேற்கலாம் என அந்நாட்டு அரசு அனுமதியளித்துள்ளது .

“ஹட்கா மட்சூரி“ என்றழைக்கப்படும் இந்த திருவிழா ஜப்பானின் ஜச்சி மாகாணத்தின் இனோசாவா நகரில் கொனோமியா வழிபாட்டு தலத்தில் நடந்து வருகிறது.

ஜப்பானியர்களின் நம்பிக்கையின் அடையாளமாக கருதப்படும் இந்த திருவிழாவில் ஆண்கள் மட்டுமே பங்கேற்பர்.

எனினும் இந்த திருவிழாவில் பங்கேற்கும் பெண்கள் ‘ஹாப்பி கோட்ஸ்’ என்று அழைக்கப்படும் ஜப்பானியர்களின் பாரம்பரிய உடையை அணிந்து கொள்வர். பின்னர், துணியால் மூடப்பட்ட புல்களை அனைவரும் ஒன்றாக சேர்ந்து தங்களின் கைகளால் தூக்கி கொண்டு கோவில் சன்னிதானத்திற்கு எடுத்து செல்வர்.

இந்த திருவிழாவில் பங்கேற்கும் ஆண்கள் குறைந்தபட்ச ஆடைகளை மட்டுமே அணிவர். இந்த விழாவின் நோக்கம் தீய குணங்களை விலக்குவது தான். அத்துடன், அதிர்ஷ்டத்தினை அடைவதாகும்.

இது நிர்வாண திருவிழா என்று பெயரிடப்பட்டிருந்தாலும் முழுமுழுக்க சடங்கு ரீதியான நிகழ்வுதான். அர்ச்சகர், இரண்டு அதிர்ஷ்ட்ட குச்சிகளை கொண்ட 100 கிளை பண்டல்களை தூக்கி வீசுவார். அந்த அதிர்ஷ்ட்ட குச்சியை கண்டுபிடிக்கும் ஆண் யாரோ, அவரை தொடுகிறவர்களுக்கு அந்த ஆண்டு முழுவதும் அதிர்ஷ்டம் கிடைக்கும் என்பதுதான் இவர்களின் நம்பிக்கை.

மேலும் தீயசக்திகளை விரட்டும் நோக்கிலும் இந்த விழா கொண்டாடப்படுவதாக கூறப்படுகிறது.









கனடா முரசு
பக்கங்கள் - 5
செவ்வாய்க்கிழமை 27/02/2024

## வெப்பம் கூடிய பெப்ரவரி இது!

ஒன்ராரியோ, பெப். 27
ஒன்ராரியோவின் காலநிலை இந்த வாரம் எதிர்பாராத திருப்பங்களுடன் இருக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.
C2




# ஹெமில்டன் நகரத்தின் செயற்பாடுகளை பாதித்த இணைய ஊடுருவல் தாக்குதல்!

**ஒன்ராரியோ, பெப்.27**
**ஹெமில்டன் நகரத்தில் இடம்பெற்ற இணைய ஊடுருவல் தாக்குதல் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**
**ஹெமில்டன் நகர இணையத்தளத்தில் பெப்ரவரி 26ஆம் திகதி வெளியிடப்பட்ட செய்தி அறிக்கையில், இந்த இணைய ஊடுருவல் தாக்குதல் நகரசபையின் பல்வேறு செயற்பாடுகளை முடக்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.**

இத்தருணத்தில் எத்தகைய தகவல்கள் களவாடப்பட்டுள்ளன என்பதனை கண்டறிய முடியாத நிலையிருப்பதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஹெமில்டன் நகர ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளமையுடன், பஸ் சேவைகளுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஊடுருவலை நிறுத்தி, செயற்பாடுகளை மீள நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நிபுணர்கள் முயற்சித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.




# டுரமில் 3 நாள்களில் 3 வங்கிகளில் கொள்ளையிட்ட நபர் சிக்கினார்!

ஒன்ராரியோ, பெப்மூ27
டுரம் பகுதியில் மூன்று நாள்களில் மூன்று வங்கிகளில் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஓஸாவாவைச் சார்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.


பெப்ரவரி 21ஆம் திகதி போவ்மன்வில் பகுதியில் அமைந்துள்ள வங்கிக்குள் நுழைந்த நபர் ஒருவர் கையில் துப்பாக்கி இருப்பதாக அச்சுறுத்தி வங்கி ஊழியர்களிடம் இருந்து பணம் பறித்துள்ளார்.

போர்ட்பெர்ரியில் அமைந்துள்ள மற்றுமொரு வங்கயில் அடுத்தநாள் இதேபாணியில் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மூன்றாவது கொள்ளைச் சம்பவமும் அக்ஸ்பிரிட்ஜ் பகுதியில் முதல் இரு கொள்ளைச் சம்பவங்களைப் போன்றே இடம்பெற்றுள்ளது.

மூன்றாவது சம்பவத்தின் போது, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு அருகில் வைத்து சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இந்தச் சந்தேகநபர் மீது கொள்ளை, மாறுவேடம் அணிந்திருந்தமை, நன்னடத்தை விதிகளை மீறியமை என மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.



# சமூக ஊடக நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கு உருவாகின்றது 'டிஜிட்டல் பாதுகாப்பு ஆணைக்குழு'

ஒன்ராரியோ, பெப்.27

தமது பயனர்களுக்கு ஏற்படும் தீங்கினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் விதத்தில் சமூக ஊடக நிறுவனங்களை ஒழுங்குபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக 'கனடாவின் டிஜிட்டல் பாதுகாப்பு ஆணைக்குழு' ஒன்றை அமைப்பதற்கு மத்திய அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது.

இதன்பொருட்டு இணைய தீங்குகள் சட்டம் என்கிற சட்டமூலத்தை நீதியமைச்சர் அரிப் விரானி நேற்று பெப்ரவரி 26ஆம் திகதி சமர்ப்பித்தார்.

இந்த சட்டமூலத்தின் ஊடாக பரிந்துரைக்கப்படும் ஓர் அங்கமாக இந்த ஆணைக்குழு உள்ளது.

கனேடியர்கள், குறிப்பாக இளைஞர்களை,இணையத் தீங்கில் இருந்து காப்பதற்கான உறுதிமொழியை நீண்ட காலத்திற்கு முன்னரே பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், அத்தகைய சட்டமூலம் ஒன்றை உருவாக்குவது என்பது மிகவும் சிக்கலான செயற்பாடாக இருப்பதாக அரசாங்கத்தினைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.




**வெப்பம் கூடிய...**

(C1 ஆம் பகக்த் தொடர்ச்சி)

ஒன்ராரியோவின் வெப்பநிலை. இரட்டை இலக்கங்களில் பதிவாகிவரும் நிலையில், கனடாவின் வரலாற்றில் வெப்பம் கூடிய பெப்ரவரி மாதமாக, 2024ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் இருக்கலாம் என எதிர்வுகூறப் பட்டுள்ளது.

கனடாவின் டொரன்டோ நகரில் இயல்பான பெப்ரவரி மாத வானிலை என்பது 10 பாகை செல்சியஸ் அளவை அடைவதே அரிதாக இருக்கும் நிலையில், ஏற்கனவே பல நாள்களில் இரட்டை இலக்க வெப்பநிலையை பதிவாகியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# விசாரணைக்குக் காத்திருக்கின்ற கைதிகளின் எண்ணிக்கை 10 வருடங்களில் இரட்டிப்பானது

ஒன்றாரியோ, பெப்.27

கடந்த பத்து வருடங்களில் கனடாவின் சிறைகளில் வழக்கு விசாரணைகளுக்காக காத்திருக்கும் கைதிகளின் எண்ணிக்கை இரு மடங்காகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது மாநில மற்றும் பிராந்திய தடுப்பு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை நான்கு மடங்காக மாற வழிவகுத்துள்ளதாக நேற்று திங்கட்கிழமையன்று (பெப்ரவரி 26) வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கனேடிய சிவில் விடுதலைகள் அமைப்பும், குயின்ஸ் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய இந்த கற்கையில், தடுப்பு நிலையங்களின் சூழல் மனிதாபிமானமற்றதாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்து வருடங்களின் பின்னர், கனேடிய சிவில் விடுதலைகள் அமைப்பினால் கனேடிய சிறைச்சாலைகள் மற்றும் தடுப்பு நிலையங்கள் தொடர்பில் அறிக்கை ஒன்று வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டாம் நிலைக் கல்வி நிறுவனங்களை ஸ்திரப்படுத்த 3 வருடங்களுக்கு மேலதிகமாக 1.3 பில்லியன் டொலர்கள்



ஒன்றாரியோ, பெப்.27

இரண்டாம் நிலைக் கல்வி நிறுவனங்களினை ஸ்திரப்படுத்துவதற்கு அடுத்த மூன்று வருடங்களக்கு 1.3 பில்லியன் டொலர்கள் மேலதிகமாக வழங்கப்படும் என ஒன்றாரியோ மாநில கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களுக்கான அமைச்சர் ஜில் டன்லொப் தெரிவித்துள்ளார்.

2019 முதல் வகுப்பு கட்டணம் உள்ளடங்கலாக கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கான மாநில அரசாங்கத்தின் குறைந்தளவு நிதியிடல் என்பது, துறையின் நிதிசார் ஸ்திரத்தன்மைக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளதாக 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வெளியான சுயாதீன அறிக்கையொன்று சுட்டிக்காட்டியிருந்தது.

புதிய இரண்டாம்நிலைக் கல்வி ஸ்திரத்தன்மை நிதியத்திற்கு அடுத்த மூன்று வருடங்களுக்கு 903 மில்லியன் டொலர்களை அரசாங்கம் வழங்கவுள்ளதாக அமைச்சர் டன்லொப் நேற்றுத் திங்கட்கிழமை (பெப்ரவரி 26) தெரிவித்தார்.

எவ்வாறாயினும், 2019ஆம் ஆண்டு முதல் பேணப்படும் வகுப்புக் கட்டண கட்டுப்பாடு என்பது 2026-27 காலப் பகுதி வரை நீடிக்கும் என அமைச்சர் கூறியுள்ளார்.




# கனடாவின் மேயர்களின் சம்மேளனம் எதிர்க்கட்சித் தலைவருக்குக் கண்டனம்

**ஒன்ராரியோ, பெப். 27**

எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலிவரை கண்டித்து கனடாவின் மேயர்கள் சம்மேளனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

நகரங்களே மேலதிக வீடுகளை நிர்மாணிப்பதற்குத் தடையாக இருக்கின்றன என்ற ரீதியில் எதிர்க்கட்சித் தலைவர் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்த கருத்தை கண்டிக்கும் வகையில் மேயர்கள், சமுதாயத்தைக் கட்டியெழுப்புவர்கள் எனவும், நகரத்தின் அபிவிருத்திக்கு தடையாக இருப்பவர்கள் இல்லை எனவும் கனேடிய மாநகரங்களின் சம்மேளனத்தின் தலைவர் ஸ்கொட் பியர்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

மத்தியில் யார் பிரதமரா இருந்தாலும், நகரத்தின் உட்கட்டமைப்பு தொடர்பில் மேயர்கள் எப்போது கவனம் செலுத்துவார்கள என அவர் தெரிவித்துள்ளார்.




# டொரன்டோ துறைமுகப் பகுதியில் பிளாஸ்டிக் கழிவுகள் குறைகின்றன

## விழிப்புணர்வு நடவடிக்கைகளினால் பயன்

ஒன்ராரியோ, பெப்.27

கடந்த வருடத்தின் ஆறு மாதங்களில் டொரன்டோவின் துறைமுகத்தில் இருந்து 63,000 சிறு பிளாஸ்டிக் துண்டுகள் எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2023ஆம் ஆண்டின் மே மாதம் முதல் ஒக்டோபர் வரையான காலப் பகுதியில் டொரன்டோ பல்கலைக் கழகம் அமைத்திருந்த வலைக் கட்டமைப்பில் 43 கிலோகிராம் எடையான பிளாஸ்டிக் கிடைத்ததாக தெரிவித்துள்ளது.

கடந்த காலப்பகுதியில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளின் பயனாக இந்த அளவு இதற்கு முந்தைய காலப் பகுதியுடன் ஒப்பிடும் போது குறைந்துள்ளமையை அவதானிப்பதாக பல்கலைக்கழகக் குழு தெரிவித்துள்ளது.

இந்த குழுவில் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள், ஆய்வாளர்கள், தன்னார்வ தொண்டர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளடங்கியிருந்தனர்.




# கனேடிய மனித உரிமைகள் ஆணைக்குழுவே பாரபட்சத்தைக் காட்டுவதாகக் குற்றச்சாட்டு!

ஒன்ராரியோ, பெப்.27

கறுப்பினத்தவர்களின் உரிமைக் காகப் போராடும் மனித உரிமைகள் குழுவானது, கனேடிய மனித உரி மைகள் ஆணைக்குழுவுக்கு எதிராக முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்துள் ளது.

தமது ஊழியர்களுக்கு எதிராக பாரபட்சத்தை காட்டுவதாக ஆணைக் குழு மீது இந்தக் குழு குற்றம் சுமத்தி யுள்ளது.

கட்டமைப்புசார் பாரபட்சங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் என மனித உரிமைகள் ஆணைக்குழு வில் மக்கள் தங்கியிருக்கும் நிலை யில், ஆணைக்குழுவே பாரபட்சத்தை வெளிப்படுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதது என அக்குழு தெரிவித் துள்ளது.

இந்தக் கட்டமைப்புசார் பாரபட் சத்தை எதிர்த்துப் போராடுவதற்கு மத்திய அரசாங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும், இந்தக் குழு பரிந்துரைகளை முன்வைத்தது.




# ஸ்கார்பரோ விபத்தில் நேற்று ஒருவர் மரணம்

ஒன்ராரியோ,பெப்.27

ஸ்கார்பரோ நகரில் நேற்று இடம் பெற்ற வீதி விபத்தில் 50 வயதான சைக்கிளோட்டி உயிரிழந்துள்ளார்.

பேர்ச்மௌன்ட் வீதி மற்றும் சென் கிளயார் ஒழுங்கைக்கு இடைப்பட்ட பகுதியில் திங்கட்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்த நபர் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட போதும், சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரி வித்தனர்.